RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2528

OPEN ACCESS

# இலக்கியங்கள்வழி மாமதுரை வரலாற்றின் பழமையும் புதுமையும்

சொ. அருணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 630003, இந்தியா

# The Ancient and Modern History of Mamadurai through Literature

C. Arunan [a, *]

[a] Department of Tamil, Alagappa Universty, Karaikudi - 630003, India

* Corresponding Author: arunankapilan@gmail.com

Received: 05-01-2025
Revised: 02-04-2025
Accepted: 09-04-2025
Published: 15-04-2025

Check for updates

**ABSTRACT**

The ancient city of Tamil Nadu, Mamadurai, is known for its pride in the development of Tamil through the Sangam and for its distinction as the capital of the Pandya kingdom. It is known through history that the Madurai, which was formerly known as old Madurai, disappeared into the sea, and that the Madurai that exists today is called Pudumadurai. This article compiles the evidence from literary quotes, mythological records, foreigners' references on Madurai, notable Sangam poets who associated Madurai with their names, the period of Old Madurai, the reason for its disappearance in the deluge of time, its connection with the Lemurian continent, the origin of later Madurai, the location of the temple, and its present status.

**Keywords:** Mamadurai, Tamil Nadu, Temple, Madurai

## முன்னுரை

உலகம் ஒன்றாக இருந்தபோதும் நீராலும் நிலத்தாலும் இரு பிரிவுகளாகவே திகழ்கிறது. நிலப்பகுதிகளிலும் ஒவ்வொரு பகுதிக்குமான சூழலும் அமைப்பும் தனித்தன்மை உடையனவாகவே விளங்குகின்றன. உயிர்கள் தோன்றிய காலத்தில் எவ்விதப் பிரிவும் கொள்ளாத உலகப் பகுதி ஆறறிவு பெற்ற மனிதர்களின் வளர்ச்சியினால் கண்டங்களாகப் பகுக்கப்பட்டன. ஆனபோதும் அறிவு வளர்ச்சிக்கு முந்தைய வரலாற்றையும் மனிதர்கள் ஆராயாமல் இல்லை.

வரலாறு என்பதற்கு (வரல் + ஆறு) வந்த, வருகிற, வரும் வழி என்பதே பொருளாகும். உலகம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அந்த வரலாற்றுத் தொடர்புகள் பதிவாகிக் கொண்டே வருகின்றன. இந்தப் பதிவுகள் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை. இவை வரலாற்றுக்கு முந்தைய நிகழ்வுகள் என்று அழைக்கப்படுகின்றன.

## வரலாறுகள் அமையும் விதம்

உலக அறிவியல் நிகழ்காலத்தில் இருந்து ஒருபுறம் எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோதும் தான் கடந்து வந்த பழங்காலத்தையும் ஆராயந்து கொண்டே வருகிறது. “வரலாறு (History) என்பது எல்லா நாடுகளிலும் முதன்முதல் பாக்கள், கதைகள் வாயிலாகவே தோன்றியது. அப்பாக்களும் கதைகளும் காலஞ்சென்ற வீரர், அரசர், நல்லோர், தீயோர் இவர்தம் வரலாறுகளையே பற்றியனவாக இருந்தன. இங்ஙனம் முதல் முதலில் வரையப்பட்ட பாடல்களும் கதைகளும் பிற்கால அறிஞர்க்கு வரலாறு காட்டும் அடிப்படையாக விளங்கலாயின. மேல்நாட்டில்

முதன்முதல் இனிய முறையில் வரலாறு எழுதத் தொடங்கிய ஆசிரியர் எரடோட்டஸ் (Herodotus) என்பவர் . அவர் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டாகும். (Rajamanikanar, 2003)

வரலாற்றுக்கு முந்தைய ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நிலங்களே முதன்மைக் காரணிகளாக விளங்குகின்றன. இந்த நிலங்களை அடிப்படையாகக் கொண்டு தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றொரு வகையில் இந்த நிலங்களில் காணப்படும் மேம்பட்ட பதிவுகள் வரலாற்றை இன்றும் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன.

## தமிழக வரலாற்றின் சான்றுகள்

அவ்வகைமையில் 'தமிழகம்' என்று பெயர் பெறும் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும்' (பனம்பாரனார், தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம்) நிலத்தில் அமைந்த நகரங்களும் ஆட்சிப் பிரிவுகளும் வரலாற்றுக்குச் சான்றுகளாக அமைகின்றன. "தமிழகம் 13 நாடுகள் அல்லது மண்டலங்களாகப் பிரிந்து இருந்தது. அவற்றின் பெயர்களாவன; பாண்டி, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், நடுநாடு ஆகியவை. இவற்றுள் பாண்டிநாடு கிட்டத்தட்ட தற்கால மதுரை மாவட்டம் முழுவதும் உள்ளடக்கியதாக இருந்தது இதுவே தமிழகத்தின் உயிர்நிலையான பகுதியாகக் கருதப்பட்டது. தூய செந்தமிழ் பேசப்பட்ட இடமாக அது மதிக்கப்பட்டது." (Kanagasapai.V,1962)

## லெமூரியா அல்லது குமரிக் கண்டம்

பழந்தமிழகமாக விளங்கிய பெருநிலப்பரப்பு இன்றுள்ளதைப் போல அளவில் சிறிய மாநிலமாக இல்லை. அது தனிப்பெருங்கண்டமாக விளங்கியிருந்தது. காலச்சூழலின் காரணமாக ஏற்பட்ட பேரிடரினால் அழிந்துபட்ட அந்தக் கண்டத்தை 'லெமூரியா' அல்லது 'குமரிக்கண்டம்' என்று ஆய்வாளர்கள் பெயர் சுட்டி அழைக்கின்றனர். அழிந்து போன இந்தக் கண்டத்தினைப் பற்றிய ஆய்வுகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழில் கிடைத்துள்ள இலக்கியச் சான்றுகள் அழிந்து போன அந்தப் பெருங்கண்டத்தைப் பற்றி விரிவாகவே கூறுகின்றன. குறிப்பாக அங்கிருந்த குமரியாறு, மகேந்திரமலை ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் மேலும் ஆராயத் தகுந்தவை.

## இலெமூரியத் தமிழர்களின் அறிவியல் நுட்பங்கள்

"இலெமூரிய நாகரிகம் தன்னாட்சியுடன் ஒரு நூறாயிர ஆண்டு முதல் இரண்டு நூறாயிர ஆண்டுவரையில் பயின்றதொன்றாம். நடைமுறையறிவால் தற்காலத்தவருக்குத் தெரியாத பல மூலப் பொருள்களும் (elements) கருப்பொருள்களும் (minerals) ஒண்பொருள்களும் (metals) அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவற்றுள் நீரை விலக்கும் ஆற்றல் வாய்ந்த கல் ஒன்றும் பேரொளிகள் தரும் ஆற்றலுடைய ரேடியம் என்பதற்கான புதிய ஒண்பொருளோ அல்லது அதுபோன்ற பிறிதோர் ஒண்பொருளோ ஒன்றும் தற்காலப் பூச்சு மண்ணைப் (Ciment) போல் மண்ணை உறுதி செய்யக் கூடிய வெண்கற்பொடி ஒன்றும் தலைமையானவை" (Appāturaippiḷḷai, k. 1941) என்பர் அறிஞர்.

'இவற்றின் உதவியால் அவர்கள் பலவகை ஊர்திகளும், வான் ஊர்திகளும் உறுதியான பாதைகளும் அமைத்தனர். மூலப்பொருள்களின் அறிவாலும் பொருள்களின் ஒப்புநிலை அறிவாலும், மரக்கட்டைகளைப் பாதுகாத்து வைக்கும் அறிவாலும், அவர்கள் 30,000 ஆண்டளவும் அழியாத கட்டிடங்களும் கோவில்களும் நிறுவினர்" (Appāturaippiḷḷai, k. 1941) என்று இலெமூரியத் தமிழர்களின் அக்கால அறிவியல் அறிவினைக் குறித்த பதிவுகள் நிறையக் கிடைக்கின்றன.

## தென்புலம்

ஆசியக் கண்டத்தின் தென்பகுதியில் இருப்பதனாலும், பரதகண்டம் என்னும் பெருநிலப்பரப்பின் தென்பகுதியில் இருப்பதனாலும் பாண்டிய நாட்டுக்குத் 'தென்புலம்' என்ற பெயரும் உண்டு. இதனைச் சிறுபாணாற்றுப்படை,

"தென்புலங் காவல் மருமான்.... மதுரையும்" (Kantasāmi mutaliyār, 1947) என்று பாண்டியர்களைத் தென்புலங் காக்கும் வேந்தராகக் குறித்துக் காட்டுகிறது.

## பாண்டிய நாட்டின் தொன்மை

உலகம் தோன்றிய காலத்திலிருந்தே பாண்டிய நாடு விளங்கியதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி

பண்பின் தலைப்பிரித லின்று ( Thirukural, 955.)

என்னும் குறட்பாவிற்கு உரை வகுத்த பரிமேலழகர் பழங்குடி என்பதற்கு உரிய விளக்கமாக, "பழங்குடி என்பது தொன்று தொட்டு வருகின்ற குடி; சேர, சோழ, பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல்" (Sundaramūrtti E., 1985) என்று குறித்தார். எனவே பாண்டிய நாடு படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த நாடு என அறிந்து கொள்ள முடிகிறது.

## பாண்டி நாட்டின் வரலாற்று ஆதாரங்கள்

பாண்டியர்களின் ஆட்சியைப் பற்றி அறிவதற்கு இலக்கிய, கல்வெட்டு ஆதாரங்கள் நிறைய உண்டு. தவிரவும் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த மார்க்கோபோலோ என்பவரின் குறிப்புகளும் உதவிபுரிகின்றன. பல செப்புப் பட்டயங்கள் பாண்டியரது ஆட்சித்திறனை எடுத்துக்காட்டுகின்றன. புராணங்கள், தலபுராணங்களில் அடங்கியுள்ள வரலாற்றுக் குறிப்புகள், மற்றும் அக்கால இலக்கிய நூல்கள், நாணயவியல், சமய நூல்கள் போன்றவை அரசியல், பொருளாதார நிலைகளை எடுத்துக் கூறுகின்றன.

மதுரைத்தல வரலாறு, கங்காதேவியின் மதுரை விஜயம் போன்ற நூல்களும் பாண்டியரின் ஆட்சியைப் பற்றிப் பல செய்திகளைத் தருகின்றன. வாசல், அமிர்குசுரு, இபின்படுடா, பரனி போன்றோரின் குறிப்புகளும் சீனர்களின் குறிப்புகளும் பாண்டியர்களின் ஆட்சியை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. இக்கால வரலாற்று ஆசிரியர்களான வில்சன், நெல்சன், சூவெல், வெங்கையா, டி.ஏ.கோபிநாத்ராங், கே.கே.பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, டி.வி.சதாசிவப் பண்டாரத்தார் போன்ற அறிஞர்கள் பாண்டியர் வரலாற்றைப் படைக்கப் பெரும்பங்காற்றியுள்ளனர்.

## இலெமூரியத் தமிழர்களின் அறிவியல் நுட்பங்கள்

"இலெமூரிய நாகரிகம் தன்னாட்சியுடன் ஒரு நூறாயிர ஆண்டு முதல் இரண்டு நூறாயிர ஆண்டுவரையில் பயின்றதொன்றாம். நடைமுறையறிவால் தற்காலத்தவருக்குத் தெரியாத பல மூலப் பொருள்களும் (elements) கருப்பொருள்களும் (minerals) ஒண்பொருள்களும் (metals) அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவற்றுள் நீரை விலக்கும் ஆற்றல் வாய்ந்த கல் ஒன்றும் பேரொளிகள் தரும் ஆற்றலுடைய ரேடியம் என்பதற்கான புதிய ஒண்பொருளோ அல்லது அதுபோன்ற பிறிதோர் ஒண்பொருளோ ஒன்றும் தற்காலப் பூச்சு மண்ணைப் (Ciment) போல் மண்ணை உறுதி செய்யக் கூடிய வெண்கற்பொடி ஒன்றும் தலைமையானவை" (Appātturaippiḷḷai, k. 1941) என்பர் அறிஞர்.

“இவற்றின் உதவியால் அவர்கள் பலவகை ஊர்திகளும், வான் ஊர்திகளும் உறுதியான பாதைகளும் அமைத்தனர். மூலப்பொருள்களின் அறிவாலும் பொருள்களின் ஒப்புநிலை அறிவாலும், மரக்கட்டைகளைப் பாதுகாத்து வைக்கும் அறிவாலும், அவர்கள் 30,000 ஆண்டளவும் அழியாத கட்டிடங்களும் கோவில்களும் நிறுவினர்” (Appāturaippiḷḷai, k. 1941) என்று இலெமூரியத் தமிழர்களின் அக்கால அறிவியல் அறிவினைக் குறித்த பதிவுகள் நிறையக் கிடைக்கின்றன.

## தென்புலம்

ஆசியக் கண்டத்தின் தென்பகுதியில் இருப்பதனாலும், பரதகண்டம் என்னும் பெருநிலப்பரப்பின் தென்பகுதியில் இருப்பதனாலும் பாண்டிய நாட்டுக்குத் ‘தென்புலம்’ என்ற பெயரும் உண்டு. இதனைச் சிறுபாணாற்றுப்படை,

“தென்புலங் காவல் மருமான்.... மதுரையும்” (Kantasāmi mutaliyār, 1947) என்று பாண்டியர்களைத் தென்புலங் காக்கும் வேந்தராகக் குறித்துக் காட்டுகிறது.

## முதற்சங்கமும் தென்மதுரையும்

தென்புலம் என்று வழங்கப்பட்ட பகுதிக்குத் தலைநகராக மதுரையே விளங்கிற்று. அது ஆதிமதுரை அல்லது தென்மதுரை என்றும் அழைக்கப்பட்டது. இதனை, “பாண்டியரின் தலைநகராக ஆதிநாளிலே விளங்கியதும் ‘மதுரை’ என்னும் பெயரினையுடைய பேரூரே யாகும். பின்னுள்ள மதுரை ஏற்பட்டபின், அன்றிருந்த கடலுள் மறைந்த அந்த ஆதிமதுரையினைத் ‘தென்மதுரை’ என்று அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். குமரி முனைக்குத் தெற்கே பரந்து விரிந்து கிடந்த பெருநிலப்பரப்பிலே, பாண்டியரின் பழந்தமிழ்ப் பேரூராக இத்தென்மதுரை திகழ்ந்தது. காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாகப் பாண்டியப் பேரரசர்கள் வழிவழியாக இதன்கண் அரசுவீற்றிருந்தனர். உலகிலேயே, முதன்முதலாக மொழியினை ஆய்ந்து செப்பமிட்டுப் பேணும் முயற்சியின் தோற்றுவாயான முதற்சங்கம் தோன்றி அமைந்திருந்ததும் இத்தென்மதுரையிலேகான்” (Puliyūrk kēcikaṉ, 2010) என்பதை அறியலாம்.

பழம் பாண்டிநாடு பரப்பளவில் பெரியதாக விளங்கியது என்றும் காலச்சுழியில் அடுத்தடுத்து நிகழ்ந்த கடற்கோள்களால் இது அளவில் சுருங்கியது என்றும் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இதற்கான சான்றுகள் தமிழ்நூல்கள் பலவற்றிலும் காணக்கிடைக்கின்றன. இந்தக் கடற்கோளினால் 49 நாடுகள் உள்ளிட்ட பிறநாடுகளும் அழிந்துபட்டன என்று நக்கீரர் உரைத்த இறையனார் அகப்பொருள் உரையின் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

“இதனால் பரந்த நிலப்பகுதி இன்றைய குமரிமுனைக்குத் தென்பால் முன்னர் இருந்துவந்ததென்பதும், அது பின்னர்க் கடற்கோற்பட்டதென்பதும் இவ்வரலாற்று உண்மைகள் ஏறக்குறைய கி.பி. ஆயிரம் ஆண்டுகள்வரையில் தமிழ்நாட்டாரிடையே பரவிவந்தன என்பதும் இலக்கிய வாயிலாக நிறுவப்பெறும்.” (Appāturaippiḷḷai, k. 1941)

புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களாலும் இச்செய்திகள் உறுதிப்படுவதோடு மேலைநாட்டு ஆய்வாளர்களும் இந்தக் கூற்றை உண்மை என்றே உரைக்கின்றனர்.

“கடலினடியை ஆராய்ந்து செய்தியறியும் இக்கால ஆங்கில ஆராய்ச்சியாளர், நமது நாட்டையடுத்த கடற்பகுதியை ஆராய்ந்து பல செய்திகளைக் கண்டறிந்துள்ளனர். அவர்கள் நமது தமிழ்நாட்டுக்குத் தென்கிழக்கேயுள்ள சக்தாத் தீவுகள் தொடங்கி மேற்கே ஆப்பிரிக்காக் கண்டத்தின் கீழ்க்கரையை அடுத்த மடகாஸ்கர் தீவு வரையில் முற்காலத்தில் லெமூரியா என்னும் பெயரையுடைய அகன்றதொரு நிலப்பரப்பு இருந்தது எனக் கண்டறிந்துள்ளனர். பிற்காலத்தில் அது கடலுள் ஆழ்ந்ததென்றும் அவர்கள் கூறுகின்றனர், லெமூரியா நிலப்பரப்பே பண்டைத் தமிழ்நாடு என்னும் ஒரு கொள்கையும் உண்டு.” (Aiyamperumāḷ kōṉār, (1964)

இந்த லெமூரியா என்னும் குமரிக்கண்டம் தமிழரினம், தமிழ்நாகரிகம் என்பனவற்றின் தாயகமாகவே திகழ்ந்துள்ளது என்பதையும் அறியலாம். அதற்குக் காரணம் முதற்சங்கமும் இடைச்சங்கமுமாகிய முதல் இரு சங்கங்கள் திகழ்ந்த தென்மதுரையும், கபாடபுரமும் இந்தக் குமரிப்பகுதியிலேயே இருந்தன. கடற்கோளால் இவை அழிந்தன என்பதும் ஆய்வாளர்கள் கூற்று.

“தமிழ் நூல்களில் மூன்று கடற்கோள்களைப் பற்றித் தெளிவான குறிப்புகள் காணப்படுகின்றன. முதல் கடல்கோளால் பஃறுளியாறும் குமரிக்கோடும் கடலில் கொள்ளப்பட்டன. பஃறுளியாற்றின் கரையிலிருந்த தென்மதுரையே பாண்டியன் தலைநகரும், தலைச்சங்கமிருந்த இடமும் ஆகும். இக்கடற்கோள் நிகழ்ந்த காலத்திலிருந்த பாண்டியனே நிலந்தரு திருவின் பாண்டியன் என்று தொல்காப்பியப் பாயிரச் செய்யுளால் குறிக்கப்பட்டவனாவான்.” (Appātturaippiḷḷai, k. 1941)

முதற்சங்கம் இருந்த நிலமாகிய தென்மதுரை அழிந்த பின்னர் அதனைத் தொடர்ந்து பாண்டியர்கள் கபாடபுரம் என்னும் தலைநகரத்தைக் கொண்டு இடைச்சங்கத்தை உருவாக்கினார்கள்.

“கடுங்கோன் ஆட்சிக்காலத்தில் கடல் பொங்கி எழுந்து பாண்டிய நாட்டின் பெரும் பகுதியைத் தன்னுள் விழுங்கிக் கொண்டது. தமிழகத்தின் பெரும் நிலப்பரப்பும் தமிழ்ப் பாண்டியர்களின் தலைசிறந்த பெருநகரும் கடலில் ஆழ்ந்து மறைந்தன. கடுங்கோன் அதைக் கண்டு கலங்கினாள் வடக்கு நோக்கி வாடிய உள்ளத்துடன் வந்தான். ஒரு புதிய தலைநகரை அமைத்துக் கொண்டு பாண்டியப் பேரரசினை மீண்டும் நிலை நிறுத்தினான்.”( Puliyūrk kēcikaṉ, 2010)

பாண்டியர் என்னும் பெயர் வழங்கப்பட்டமைக்குப் பல காரணங்கள் வரலாற்று ஆய்வாளர்களால் கூறப்படுகின்றன. பண்டு என்னும் சொல்லிலிருந்தே பாண்டியர் என்னும் பெயர் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஒரு கருத்து.

## கபாடபுரம் பற்றி இராமாயணக் குறிப்பு

பாண்டியர்களின் பொன்மயமான பொலிவு மிகுந்த ராஜ கம்பீரம் நிறைந்த கபாடபுரமும் இடைச் சங்கத்தில் இறுதியிலேயே அழிந்து கடலுக்கு இரையாகிவிட்டது, “பட்டினப்பாலையும் சிலப்பதிகாரமும் காவிரிப்பூம்பட்டினத்தைச் சித்திரிப்பது போல, கபாடபுரத்தைச் சொல்ல இன்று நமக்கு இலக்கியம் இல்லை.” (Pārthasārati, Nā., (Maṇivaṇṇaṉ). 2002) ஆனாலும் அயலகத்தார் குறிப்புகளிலிருந்து கபாடபுரத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன.

“கீழ்த்திசைக்குரிய சேனையை அனுப்பிவிட்டுக் குறிக்கப்பட்ட வானரர்கள் சிலரைச் சுக்கிரீவன் தென்திசைக் கேவுவானாயினான், பேராற்றலுள்ள அங்கதனைத் தலைவனாகக் கொண்ட, வேகமும் ஆண்மையுமுள்ள, அக்கினி குமாரனான நீலன், அநுமான், பிரமதேவன் புத்திரனாகிய பெருவலியுடைய ஜாம்பவன், சுகோத்திசன், சசாரி, சசகுன்மன், கஜன், கவாக்ஷன், கவயன், சுஷேணன், ரிஷபன், மயிக்தன், .துவிவிதன், விஜயன், கக்தகமாகனன், அக்கினி குமாசர்களான உல்காமுகன், அசங்கன் முதலிய வீரர்களை தேசங்களையறிந்த, அரிகுலத் தலைவன் தெற்குக் திக்குக்குப் போங்களென்று கட்டளையிட்டான். அவர்களுக்கு முன்னே போகும்படி தாமதமின்றிச் செல்லவல்ல பெருஞ்சேனையையும் ஏவினன். பின்பு அவன் தென்றிசையில் எந்த இடம் போதற்கரிதாயிருக்குமென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத் தொடங்கினான். (Naṭēsa Sāstiri, Kaṉakasundarampiḷḷai, 1907)

“பலவித மரங்களும் கொடிகளும் செறிந்த ஆயிரம் சிகரங்களை உடைய விந்திய மலையையும் பாம்புகள் தங்குவதற்கு ஏற்றதாகிய நர்மதா நதியையும் அழகிய கோதாவரியையும் பெரிய கிருஷ்ணவேணி நதியையும் பெரும்பகுதிகளை உடைய வரதா நதியையும் மேகலை, உற்கலை, தசார்ணம் முதலிய நகரங்களையும் அஸ்வகந்தி, அவந்தி முதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள். விதர்ப்பம். ரிஷிகேஷ், அங்கம், வங்கம், கலிங்கம், கௌசிகம், மலைகளும் நதிகளும் கிளைகளும் உடைய தண்டகாரண்யம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள்.

அவ்வாறே ஆந்திரம் புண்டரம், சோளம், பாண்டியம், கேரள முதலிய நாடுகளையும் காண்பீர்கள். பின்பு தாதுக்கள் நிறைந்ததும் விசித்திரமான சிகரங்களை உடையதும் பலவர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளையுடையதும் சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத் தேடுங்கள். அதன்பின் தேவர்கள் வந்து நீராடுகின்ற திவ்யமான தெளிந்த நீரை உடைய அழகிய காவிரி நதியை அங்கே காண்பீர்கள். அந்த மலையின் சிகரத்தில் ஆதித்தனுக்குச் சமானமான, மிகுந்த ஒளியை உடைய முனிவ சிரேஷ்டர் அகத்தியரைக் காண்பீர்கள். பின்பு மகரிஷி இடத்தில் விடைபெற்றுச் சென்று முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபரணி நதியைக் காண்பீர்கள், அது தனது அழகிய சோலைகளால் மூடப்பட்ட துவீபங்களுடையதாய்த் தனது நாயகன் இடத்தில் போகும் பெண்ணைப் போலச் சமுத்திரத்தின் இடத்தில் சென்று விழும். அதை விட்டு அப்பால் சென்றாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிநாட்டின் கதவைக் காண்பீர்கள்" (Naṭēsa Sāstiri, Kaṉakasundarampiḷḷai, 1907) என்று வால்மீகி இராமாயணத்தில் பாண்டிய நாட்டைப் பற்றிய அறிமுகம் இடம்பெற்றுள்ளது.

## தொல்காப்பியம் குறிப்பிடும் பாண்டியர்

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில், நிலந்தரு திருவின் பாண்டியன் அவைக்களத்து அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேறியது பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

"குமரி மலையும் பஃறுளியாறும் கடலால் கொள்ளப்பட்டது, முதற்கடற்கோள் நிகழ்ந்த காலத்தில் என்றும், முடத்திருமாறன் காலத்தில் உண்டான கடல்கோள் இரண்டாம் கடல்கோள் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும் இடைச்சங்க காலத்து இறுதியில் இருந்த நிலந்தரு திருவிற் பாண்டியனும் கடைச்சங்க காலத்துத் தொடக்கத்தில் இருந்த முடத்திருமாறனும் ஒருவரே என்பதும் அறிஞர் சிலர் கருத்தாம். இன்னும் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியனும், நிலந்தரு திருவிற்பாண்டியனும் ஒருவரே என்பதும் சிலர் கருத்தாகும். நிலந்தரு திருவிற் பாண்டியனைக் குறித்து மாங்குடி மருதனார் தாம் பாடிய மதுரைக் காஞ்சியில் அவன் இருபெரு வேந்தராகிய சேர, சோழரையும் மற்றும் வேளிர் பலரையும் வென்றான் என்று கூறுகின்றார். மேலும், இவன் மலைகளைக் கடந்து வழிகளையுண்டாக்கும் மிகவாற்றல் உடையவன் என்றும் நிலந்தந்த பேருதவியைச் செய்தவன் என்றும் நெடியோன் என்றும் அவர் குறிப்பிடுகிறார். நெட்டிமையார், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிப் பாடும் வேளையில் "முந்நீர்க் கடல் தெய்வத்திற்கு எடுத்த விழாவினையுடைய நெடியோனால் உளதாக்கப்பட்ட பஃறுளியாற்று மணலினும் பலகாலம் நீ வாழ்வாயாக" என வாழ்த்தியிருக்கிறார். இதனால் பஃறுளியாறு இந்த நெடியோனால் வெட்டப்பட்டது" (Aiyamperumāḷ kōṉār, 1964) என அறியலாம்.

## அர்த்த சாஸ்திரக் குறிப்பு

"மௌரிய மரபை நிலைநாட்டிய சந்திரகுப்த மன்னனுக்கு அமைச்சராய் இருந்து உதவிய சாணக்கியன் தான் எழுதிய அர்த்தசாஸ்திரம் என்னும் நூலில் முத்துக்களின் பலவகைகளைப் பற்றிக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்றை அவர் 'பாண்டிய கவாடம்' என்னும் பெயரால் குறிக்கின்றார். இப்பெயரிலிருந்து கபாடபுரத்தில் அருகில் கடலில் அக்காலத்தில் சிறந்த முத்துக்கள் எடுக்கப்பட்டன என்றும் அவை தலைநகருக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டன என்றும் அதனால் அவை தலைநகரத்தின் பெயரால் வழங்கப்பட்டன என்றும் அறியமுடிகிறது. தமிழ்நூல்களில் இவை 'தென்கடல் முத்து' எனச் சிறப்பிக்கப்படுகின்றன."(Aiyamperumāḷ kōṉār, 1964)

சங்க இலக்கியங்களில் புலவர்கள் குழு என்னும் பொருளில் சங்கம் என்ற பெயர் இல்லை. பரிபாடலில் மட்டும் சங்கம் என்னும் சொல் கையாளப்பட்டிருக்கிறது. அதற்கும் 'வரம்பிலாத எண்ணிக்கை' என்றே பொருள் கூறப்படுகிறது. ஆனால் இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர்

உரை வரைந்த வேளையில் முச்சங்கங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் இதனைப் பின்பற்றியுள்ளார். அவர்தம் குறிப்புகளின்படி முச்சங்கங்கள் இருந்த இடமும் பெறப்படுகின்றன. அவற்றில் தலைச்சங்கம் கடல்கொண்ட தென்மதுரையிலும் இடைச்சங்கம் கபாடபுரத்திலும் கடைச்சங்கம் தற்காலத்திலிருக்கும் மதுரையிலும் இருந்ததாக அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த முச்சங்கங்கள் குறித்தும் அவை இருந்த இடங்கள், புலவர்களின் எண்ணிக்கை, சங்கங்கள் இருந்த காலம் என்பன குறித்தும் ஆய்வாளர்களுக்குத் தகுந்தாற்போலக் கருத்துகள் விளங்கியபோதும் அவற்றை ஒருங்கிணைத்துக் காணின் ஒரு தெளிந்த முடிவைப் பெற இயலுகிறது.

## மணவூர்

“பாரதக் கதையில் பாண்டியனது தலைநகர் மணவூர் என்று கூறப்படுவதனால் அஃது இடைச்சங்கத்தினும் பிந்தியது என்றும், வால்மீகியாரின் இராமாயணத்தில் கவாடபுரமே தலைநகராகக் கூறப்படுதலால் அஃது இடைச்சங்க காலத்தில் இருந்ததென்றும் தலைச்சங்கம் இராமாயணத்திற்கும் மாபாரதத்திற்கும் மிகப்பழமையானது என்றும் ஏற்படுகின்றன.”( Appātturaippiḷḷai, k. 1941)

இதில் குறிப்பாக வால்மீகி இராமாயணத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் இருந்ததாகக் கூறப்படும் கபாடபுரம் பற்றிய பதிவுகள் உள்ளன.

“தடோ ஹேமாயம் திவ்யம் முக்த மனி விபுசிடம்

யுக்தம் கவாடம் பாண்டியானாம் கடா த்ரக்சுயத வானராம்” (வா(Vaalmiki Ramayanam)

“சீதையைத் தேடுவதற்காக இராமர் வானரங்களை அனுப்பும்போது, ‘வானரர்களே, பொன்மயமானதும், முத்து, மணி இவற்றால் அழகு செய்யப் பெற்றதும் ஒளிமிக்கதுமாகிய பாண்டியர் கவாடத்தைப் பார்ப்பீர்கள்’ என்று கூறியதாக வான்மீகி இராமாயணம் கூறுகிறது. இதில் கவடாத்தை என்றது கவாடபுரத்தையேயாம்” (Aiyamperumāḷ kōṉār, 1964) என்பது அறிஞர் துணிபு.

இது மட்டுமின்றி இராமாயணக் காலத்தைக் கணக்கிட்டால் இடைச்சங்கம் இருந்ததாகக் கூறப்படும் கபாடபுரத்தின் காலத்தையும் அறிந்து கொள்ள முடியும் என்பது உறுதியாகிறது. இதனையே, “வரலாற்றாசிரியராகிய பண்டாரக்கர் என்பவர் இராமாயணக் காலத்தைப் பற்றியாராய்ந்து அது கி.மு. 700-க்கு முற்பட்டது எனக் கூறுகின்றார். இதினின்று இடைச்சங்க காலம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது” (Aiyamperumāḷ kōṉār, 1964) என உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இராமாயணம் கபாடபுரத்தைக் குறிப்பிடுவதைப் போல, மகாபாரதம் பாண்டியர்களின் தலைநகராக மணலூரைக் குறிப்பிடுகிறது. மணலூரில் இருந்து பாண்டியர்கள் ஆட்சி செய்ததையும் பாண்டவர்களுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட உறவு குறித்தும் மகாபாரதம் வழியாக அறிய முடிகிறது. “மகாபாரதக் காலத்தில் மணலூர் என்ற ஊரை ஆண்டு வந்த பாண்டியன் பெயர் சித்திரவாகனன்; இவன் மகளே சித்திராங்கதை. இந்தச் சித்திராங்கதையை மணலூரில் கண்டு காதல் கொண்டவனே அர்ச்சுனன்” (Soundrapāṇdiyaṉ, S, 1997) என்று தமிழில் அச்சாகியுள்ள சில கதைப்பாடல் நூல்கள் தெரிவிக்கின்றன.

## மதுரை அல்லது வடமதுரை

“பாண்டியன் முடத்திருமாறன் இரண்டாம் கடற்கோளால் இறவாது தப்பி, இப்போதைய மதுரையைத் தலைநகராக்கிக் கொண்டு ஆண்டுவந்தான். இங்ஙனம் தப்பியோடிய காலத்தில் இவன் கால் முடமாயிருக்க வேண்டும்” (Aiyamperumāḷ kōṉār, 1964) என்றும் அறிஞர் கருதுகின்றனர்.

பாண்டவர், பாண்டியர் பெயர்களும் யமுனைக்கரை மதுரை, வைகைக்கரை மதுரை ஆகியவற்றின் பெயர்களும் தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை. இத்தொடர்புகளுடன் மகாபாரதக் கதைக்கு இசைவு உண்டு என்பதும் இயல்பான ஒரு கருத்தே. ஆனால், புராண இதிகாசக் கதைகள் சமஸ்கிருதத்துக்கும் வடபுலங்களுக்கும் உயர்வளித்த ஒரு இடைக்காலப் போக்கை மிகைப்படுத்திக் காட்டுவன. அவற்றை அடிப்படை மெய்ம்மைகளாகக் கொண்ட கோட்பாடுகள் வரலாற்று முறையில் வலுவுடையன ஆகமாட்டா. தவிர இந்தவகை வடக்கு, தெற்கு இசைவுகள் வேறு பல உண்டு. தமிழகத்திலேயே சோணாட்டுக்கும் பாண்டி நாட்டுக்கும் இடையிலும்; சோழ, பாண்டி நாடுகளுக்கும் ஈழநாடு அல்லது இலங்கைக்கும், தமிழகத்துக்கும், கடல்கடந்த தென்கிழக்காசியப் பகுதிகளுக்கும் இதுபோன்ற பல இசைவுகள் உண்டு. சிந்து நிலத்திலும் தமிழகத்திலும் பாஞ்சாலம் என்ற ஊர்ப்பெயர், நாட்டுப் பெயர்கள், மலயம் என்ற மலைப்பெயர்கள், வங்கத்திலும் தமிழகத்திலும் பாண்டியர் தாம்பரபர்ணி என்ற பெயர்கள், சோணாட்டிலும், பாண்டி நாட்டிலும் பாவநாசம், குற்றாலம் என்ற பெயர்கள், தமிழகத்திலும் ஈழத்திலும் திருநெல்வேலி போன்ற பெயர்கள்; தமிகத்திலும் கடல் கடந்த தென்கிழக்காசியாவிலும் மதுரை, மாறன் போன்ற பெயர்கள் ஆகியவை இதிகாச புராணங்களாய் விளக்கப்படத்தக்கவையுமல்ல, விளக்கப்படவுமில்லை. இவற்றுட் பல தமிழர் அரசியல், வாணிக, குடியேற்றப் பரப்புக்களின் சின்னங்கள் என்பது தெளிவு. வடக்குத் தெற்குத் தொடர்பு வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பொது இன மரபு, குடிப்பெயர்வு முதலிய தொடர்புகள் குறித்தன ஆகலாம்" (Kaṉagasapai, V, 1962) என்பர் அறிஞர்.

## பாண்டிய மண்டலத்து, மதுரைப் பெயரிணைந்த சங்கப் புலவர்கள்

மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார், மதுரை ஆசிரியன் கோமடங்கொற்றன். மதுரை ஆசிரியன் மாறனார், மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார், மதுரை இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனார், மதுரை எழுத்தாளன் குறுங்குடி மருதனார், மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன், மதுரை ஓலைக்கடைக் கண்ணன் புகுந்தாராயத்தனார், மதுரை ஓலைக்கடையத்தார் நல் வெள்ளையார், மதுரை கடையத்தார் மகன் வெண்ணாகன், மதுரை கோலம் புல்லன், மதுரை நல்வெள்ளி, மதுரை பாலாசிரியனறற்றாமனார், மதுரை மருதங் கிழார் மகன் பெருங்கண்ணனார், மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன், மதுரை மருதனிள நாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கண்டாகத்தன், மதுரைக் கண்ணனார், மதுரைக் கவுனியன் பூதத்தனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் காடாத்தனார், மதுரைக் காடுவலியங் கூத்தனார், மதுரைக் காமக்கண்ணி நம்பாலத்தனார், மதுரைக் கூத்தனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைக் கௌணியர் முத்தனார், மதுரைச் சீத்தலைச் சாத்தனார், மதுரைச் சுள்ளம் போதனார், மதுரைத் ததகங்கண்ணானார், மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார், மதுரைத் தமிழ் நாயனார், மதுரைத் தமிழ்க் கூத்தனாகன் தேவன், மதுரைத் தற்கூத்தன்கவேன் மள்ளனார், மதுரைப் படைமங்கை மன்னியார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவன், மதுரைப் பள்ளி மருதங்கிழர் மகனார் சோகுத்தனார், மதுரைப் பாலாசிரியனார், மதுரைப் பாலாசிரியன் நம்பாவன், மதுரைப் புலவங்கண்ணனார், மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார், மதுரைப் பெருங்கொல்லனார், மதுரைப் பெருமருதனார், மதுரைப் பெருமருதிள நாகனார், மதுரைப் பேராலவாயர், மதுரைப் பொத்தனார், மதுரைப்பாலாசிரியர் சேறங்கூத்தன்.

மதுரை சங்கம் வளர்த்த ஊர் என்பதற்கு மதுரையிலேயே தோன்றி அவ்வூர்ப் பெயரைத் தன்பெயரோடு இணைத்துக் கொண்ட புலவர்களின் மேற்பட்டியலே சான்றாக அமைகின்றது.

## கடம்பவனத்தில் மதுரைநகரம்

"மணவூரிலே ஒரு வணிகன் இருந்தான். அவன் தன் மனைவியுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வாணிகம் செய்து வருபவன். ஒருமுறை வாணிகத்திற்குச் சென்று விட்டு அவன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். வழியில் ஓரிடத்தில் பொழுது சாயத்

தொடங்கியது. இரவில் தங்கி இருப்பதற்கு ஏற்ற ஒரு இடத்தை அவனும் தேடினான். கடம்ப மரங்கள் செறிந்து இருந்த இடம் ஒன்று அவன் கண்ணெதிரே தோன்றியது, அவ்விடத்திலேயே அன்றிரவு தங்கி இருக்கவும் அவன் முடிவு செய்தான். அங்கே ஒரு பெரிய பொய்கையும் அதன் கரையிலே ஒரு சிவலிங்கம் இருந்தது. பொய்கையில் நீராடி விட்டுச் சிவலிங்கத்தை வணங்கிப் போற்றியவனாக அவன் உள்ளம் மகிழ்ந்தான். அங்கேயே இரவு தங்கி இருந்தான். மறுநாள் மணவூரை அடைந்ததும் தான் கண்ட கனவைப் பற்றிய செய்தியை அரசனிடம் சென்று அவன் தெரிவித்தான். பொய்கையும் சிவலிங்கமும் அந்த இடத்திலேயே காணப் பெற்றதனால் அவ்விடத்தில் பழங்காலத்திய பேரூர் ஒன்று இருந்திருக்க வேண்டும் எனவும் அவன் சொன்னான். அரசனும் பெரிதும் உவகையோடு வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டான். அது தலைநகருக்குத் தகுதியான இடமாகவே அவனுக்குத் தோன்றிற்று. அங்கேயே தன் தலைநகரை அமைக்கவும் அவன் முடிவு செய்தான்.

“சூள தாமறைச் சென்னியும் தொடத்தொட நீண்ட

நீள னீநினக் கன்பில மாயினு நீயே

மூள வன்புதந் தெங்குடி முழுவதும் பணிகொண்

டாள வேகொலிக் கானகத் தமர்ந்தனை யென்னா”(Thiruvilaiyadarpuranam).

என்று போற்றினான். தொடர்ந்து பாண்டியனின் பணியாளர்கள் இரவு பகலாக அங்கே பணி செய்தனர். சிவலிங்கத்தை நாயகமாக்கி ஒரு பெரிய கோயிலை முதலில் எழுப்பினர். அந்தக் கோயிலைச் சுற்றிலும் தெருக்களை அமைத்தனர். தெருக்களில் இருமருங்கும் பல்வகை நிலையிலும் வாழ்வதற்கேற்ற வீடுகளும் மாளிகைகளும் எழுந்தன. அரசனின் பெருங்கோயில் நகரத்தின் வடகிழக்கு மூலையில் கவினுடன் அமைக்கப்பட்டது. உயரமான மதில் சுவர்களுடன் கூடிய கோவில் ஒன்றும் நகரைச் சூழ்ந்து எழுந்தது. கோட்டை மதிலுக்குப் புறத்தே ஆழமான அகழி இணைத்தனர். அகழி அடுத்தாற்போல அடர்த்தியான காவற்காடும் உருவாயிற்று. இவ்வாறாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் வாழ்வதற்குரிய வசதிகளும் இறைவனின் திருக்கோயிலும் எல்லாம் செவ்வையாக அமைந்தன அதன்பின்னர் பாண்டியனும் ஊரை விட்டு வந்து மதுரையைத் தன் இருப்பிடமாகக் கொண்டான்” (Puliyūrk kēcikaṉ, 2010) என்று இவ்வாறு மதுரை எழுந்த கதையைத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது.

## நான்மாடக் கூடல்

இரண்டாம் கடல்கோளுக்குப் பின் இப்போதைய மதுரைப் பாண்டியர்க்குத் தலைநகராயிற்று. முதற் சங்க காலத்து மதுரைக்கு இது வடக்கிலுள்ளது ஆதலால், இது வடமதுரை என்றும் குறிக்கப்படும். இம்மதுரையைப் பற்றிப் பல செய்திகள் புராண நூல்களில் கூறப்பட்டுள்ளன. இதற்குக் கூடல், ஆலவாய் முதலிய பல பெயர்கள் உண்டு, இப்பெயர்க்காரணங்கள் வருமாறு:

“ஒருகால் பாண்டியன்மீது சினங்கொண்ட இந்திரன் மதுரையை அழிக்குமாறு தனக்கு அடங்கிய எழு மேகங்களையும் ஏவினான். அவை மதுரை நகரின் மேலே பரவிப் பெருமழை பொழிந்து, அந்நகரை அழிக்கத் தொடங்கின. அப்போது பாண்டியவரசன் மதுரைச் சொக்கநாதரை வழிபட்டு அவ்வின்னலைப் போக்கியருளுமாறு வேண்டினான், அப்போது அவ்விறைவரது ஆணையால் அவரது சடைமுடியினின்று நான்கு மேகங்கள் கிளம்பி, மதுரை நகர்மீது நான்கு திசைகளிலும் நான்கு மாடங்களைப் போல ஆக, இந்திரனது பெருமழையால் மதுரை அழியாதவாறு காத்தன.” (Aiyamperumāḷ kōṉār, 1964) இதனால் மதுரைக்கு, கூடல் அல்லது நான்மாடக்கூடல் என்பது பெயராயிற்று.

## தமிழிலக்கியங்களில் மதுரை

சங்ககால மதுரை, கோயிலை மையமாகக் கொண்டு அகன்ற வீதிகளும் தெருக்களும் உடையதாக அமைக்கப் பெற்றிருந்தது. வானுயர்ந்த மாடங்களும், கோட்டைகளும் மதில்களும் அகழிகளும் கொண்டதாகவும் மிகுந்த பாதுகாப்பு உடையதாகவும் அமைந்திருந்தது. பரிபாடலில் மதுரையின் நகர அமைப்பு ஒரு தாமரைப்பூவோடு ஒப்புமைப்படுத்தப் பெற்றுள்ளது. மதுரைக்காஞ்சி மதுரையின் அழகினைத் தனித்து இயம்புகிறது. மேலும் நெடுநல்வாடை, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் மதுரை நகரும் பாண்டிய நாடும் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.

## புராணங்கள் கூறும் மதுரை குறித்த செய்திகள்

மதுரையின் பெருமையைப் பற்றிப் புராணங்கள் விரிவாகப் பேசுகின்றன. குறிப்பாக மதுரையில் சிவபெருமான் நடத்திய 64 திருவிளையாடல்களைப் பற்றித் திருவிளையாடற்புராணம் குறிப்பிடுகிறது. அதில் மதுரைக்கு ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்ட காரணத்தையும் அறிய முடிகிறது.

## திருஆலவாய்

“ஒருகால் மதுரை கடல்கோளால் அழிய, அது இருந்தவிடங்கூட அறிய முடியாமற் போயிற்று. பிற்காலத்தில் மதுரையை ஆளப்போந்த பாண்டியவரசன், முன் மதுரை இருந்தவிடத்திலேயே மீண்டும் புதிய மதுரையை உண்டாக்கி அதனைத் தலைநகராகக் கொண்டு ஆளவேண்டுமென்று விரும்பினான். அப்போது அவனுக்குப் பழைய மதுரையின் எல்லை தெரியாமற் போனதால், அதைக் காட்டியருளுமாறு சிவபெருமானை வேண்டினான். அவரும் அவனது வேண்டுகோட்கிரங்கித் தமது கையில் கடகமாய் அமைந்திருந்ததொரு பாம்பைக் கீழே செல்லவிட்டு, மதுரை நகரின் எல்லையைக் குறித்துக் காட்டுமாறு அதற்குப் பணித்தார். அதுசென்று தன் உடலை வளைத்து நிறுத்தி, மதுரையின் எல்லையைப் பாண்டியனுக்குக் குறித்துக் காட்டியது, இதனால் மதுரைக்கு ஆலவாய் என்பது பெயராயிற்று.” (Aiyamperumāḷ kōṉār, 1964) இவ்விரண்டும் புராணக் கூற்று.

## திருஆலவாய் என்னும் மதுரையின் பெருமை

“எவ்வுலகங்களினும் புண்ணியதலங்களே சிறந்தன. அவைகளுள்ளே சிவதலங்கள் சிறந்தன. அவைகளுள்ளே அறுபத்தெட்டுச் சிவதலங்கள் சிறந்தன. அவைகளுள்ளே பதினாறு சிவதலங்கள் சிறந்தன. அவைகளுள்ளே நான்கு சிவதலங்கள் சிறந்தன. அவைகளாவன சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்பவைகளாம். இந்நான்கனுள்ளும், சிதம்பரம் தரிசித்தவர்களுக்கும், காசி தன்னிடத்திறந்தவர்களுக்கும், திருக்காளத்தி வழிபட்டவர்களுக்கும் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும்: திருவாலவாய் தன்பெயரைக் கேட்டவர்களுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும்: ஆதலால், இந்நான்கனுள்ளும் திருவாலவாயே சிறந்தது. இதுவுமன்றி, பரமகருணாநிதியாகிய பரமசிவன் எல்லாத்தலங்களையும் படைக்கும்பொருட்டு முன்னே இத்திருவாலவாயைப் படைத்து இதன்கண் எழுந்தருளியிருந்தார்” (Arumukanāvalar, 1957) என்று திருவிளையாடற்புராணம் குறிப்பிடுகிறது.

## மதுரை - பொருள் விளக்கம்

‘மதுரை’ என்ற சொல் ‘இனிமை’ என்னும் பொருளைத் தருவது. வாழ்வார்க்கு என்றும் இனிது என்ற தன்மையினாலே, இவ்வாறு அழைக்கப்படுகிறது. “சிவபெருமான் தன்

திருமுடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இந்நகரின் கோயில்களிலும் கோயிற் கோபுரங்களிலும் தெளித்தான். அதனாலேயே மதுரை எனப் பெயர் வந்தது என்றும் தலபுராணங்கள் சிறப்பிக்கின்றன. மதுரம் என்பதும் இனிமை; தமிழ் என்பதும் இனிமை. தமிழ் வளர்கின்ற நகரம் என்று குறிக்கவே 'மதுரை' என்றனர். மது+உரை= மதுரமான பேச்சு; அது தமிழ் என்பார்கள் சிலர். (Puliyūrk kēcikaṉ, 2010)

இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வால்மீகி இராமாயணத்தின் ஒரு நிகழ்வைப் பொருத்திப் பார்க்க இயலும். அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்று அசோகவனத்தில் அவளைக் கண்டு, அவளிடம் பேசத் தகுந்த தருணம் பார்த்துக் கொண்டிருந்த வேளை;

"வாசம் சோதாஹரிஷ்யாமி மானுஷீமிஹ ஸம்ஸ்க்ருதாம்

யதி வாசம் ப்ரதாஸ்யாமி மானுஷீமிஹ ஸம்ஸ்க்ருதாம்

ராவணம் மன்யமானா மாம் ஸீதா பீதா பவிஷ்யதி

வானரஸ்ய விஸேஷேண கதம் ஸ்யாதபிபாஷணம்

அவஸ்யமேவ வக்தவ்யம் மானுஷம் வாக்யமர்த்தவத்

மயா ஸாந்த்வயிதும் ஸாக்யா நான்யதேயமந்நிநிதா" (Valmiki Ramayanam)

அனுமன் சீதையிடம் எந்த மொழியில் பேசுவது எனக் கவலை கொண்டவனாக, 'ஸம்ஸ்கிருதத்தில் பேசினால் ஸ்ரமம் ஏற்படுமென்றும், நான் ப்ராம்ஹணன் போல ஸம்ஸ்கிருதத்தில் பேசினேனேயானால் ஸீதை என்னை ராவணனென்று உணர்ந்து பயந்து விடுவாள். அதிலும் வானரம் பேசுகிறதே என்றும் பயந்து விடுவாள்.' இப்படி யோசித்துத் தீர்மானித்தவனாய், 'நல்ல பொருள்களுடன் கூடிய கோசலதேசத்தில் வ்யவஹரிக்கும் மானுஷ்யமான பாஷையிலே பேசவேண்டும். அப்படிப் பேசினால்தான் இவளை ஆசுவாசப்படுத்தலாம்' என்று கருதிக் கொள்கிறான்.

"ஏவம் பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா மஹாகபி

ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹார ஹ" (Valmiki Ramayanam)

சீதையினிடத்தில் மனுஷ்யனாகப் பேசுவதா? குரங்காகப் பேசுவதா? எப்படிப் பேசினாலும் இராவணனே மாறுவேஷம் தரித்து வந்து விட்டானென்று கருதிக் கொள்வாள் என்பதால், இவ்விதமான பலவித யோசனைகளைச் செய்தபிறகு சீதைக்கு மட்டிலும் கேட்கும்படிக்கு இனிமையான மதுரமான பாஷையில் பேசினான். இந்த மதுரமான பாஷை என்பதை அறிஞர்கள் தமிழ் என்று சுட்டுவர். இனிமை நிறைந்த மொழியாகிய தமிழிலேயே அனுமன் அரக்கிகள் அறிந்து கொள்ள இயலாத வண்ணம் பேசினான் எனவும், இராமனுடைய சிறப்புகளைச் சீதைக்கு எடுத்துரைத்தான் எனவும், அதனாலே இந்தக் காண்டத்திற்குச் சுந்தரகாண்டம் எனப் பெயர்வந்தது எனவும், அனுமனுக்குச் சுந்தரன் எனப் பெயர் ஏற்பட்டது எனவும் கூறுவர். மதுரையில் உறையும் சிவபெருமானுக்குச் சொக்கேசன் எனவும் சோமசுந்தரம் எனவும் பெயர் அமைந்திருப்பதையும் இதனோடு இணைத்துக் காணலாம்.

"வான்மீக முனிவர் ஈண்டு மக்கள் மொழியாகக் கொண்ட இனிமை வாக்கு (மதுராங்கிரம்) தமிழ் என்னும் இனிய மொழியேயாமென்று துணியப்படும். நன்கு பேசுமிடத்திலெல்லாம் இம்முனிவர் மதுரம் என்ற சொல்லை வழங்கல் மிகுத்துள்ளதேனும், அவ்விடனெல்லாம் போலாது இவ்விடத்தில் இன்ன பாஷையிற் பேசுவதென்று துணிந்து அம்மதுர மொழியிற் றூது சொல்லப் புகுந்தானென்றே கொள்ளக் கிடக்கின்றது காண்க. அவர், மேல் 'பேரறிவாளனாகிய அனுமான் தன்னுள்ளே பலவகையாகச் சிந்தித்து விதேகபுத்திரிக்கு மதுர வாக்கியத்தைக் கேட்பிக்கத் தொடங்கினான்' (ஸுந்-ஸர்.31-1) இம்மதுர வாக்கியம் மாநுஷ வாக்கியம் என்பதும் பொருள் நிறைந்ததென்பதும் முன் ஸர்க்கத்திற் (29) கூறியதேயாதல் தெளிக. இக்கருத்திற்கிணங்கவே தமிழ்

நிலைத்து வளர்ந்த பாண்டியர் தலைநகரை மதுரை எனப் பெயரிட்டனரென்றுய்த் துணரலாகும். சிறுபாணாற்றுப்படையில்,

"தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின்

மகிழ்நனை மகின்று மதுரையும் வறிதே"

என வருதலையும் இதற்குப் பொருந்தவே நோக்கிக் கொள்க. 'மதுரை' என்பது மதுரம் என்பதன் அடியாக வந்த பெயரென்பது தெள்ளிது" (Irākavaiyaṅkār, rā, 1952),) என்பார் அறிஞர்.

வையையாற்றின் நீர்த்துறைகளுள் சிறப்பு உடையது திருமருத நீர்ப்பூந்துறை என்பதாகும். மருதமரத்து நீழலை உடையதனால் இப்பெயரிலேயே விளங்கும் மருதை என்ற சொல்லும் எழுந்தது. இன்றும் கிராமப்புறங்களில் மருதை என்ற சொல்லே வழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மருதை திரிந்து மதுரையானதா? அல்லது மதுரை திரிந்து மருதையானதா என்பது ஆய்வுக்குரியது.

## பாண்டிய நாடு குறித்த அயலகப் பதிவுகள்

கி.மு. 500 ஆண்டளவில் இலங்கையை ஆண்ட விசயன் என்பவன் பாண்டியன் மகளை மணக்க விரும்பி மதுரைக்குத் தனது தூதுவர்களை அனுப்பினான். பாண்டியனும் இசைவு தெரிவிக்கவே விசயன் இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதோடு, தனது தோழர்களுக்கும் பாண்டிய நாட்டுக் கன்னிகளை மணம் முடித்துக் கொடுத்தான் என்று இலங்கையின் வரலாறு கூறும் மகாகவம்சம் என்னும் நூல் விவரிக்கிறது.

மெகஸ்தனிஸ் தனது குறிப்புகளில் "ஹெராக்ளிஸ் இந்தியாவில் பிறந்தவர். அவரிடம் மிகுந்த வீரம் இருந்தது. அளவிட முடியாத தனி உடல் பலம் இருந்தது. அவருக்குப் பல மனைவியரும் பிள்ளைகளும் இருந்தனர். ஆனால், ஒரு பெண்தான் இருந்தாள். அவர் தமது பிள்ளைகளுக்கு நாட்டைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். மகளுக்குப் பாண்டிய நாட்டை வழங்கினார்" (Pimalā piracāt makōpātyāya, Taṭciṇāmūrtti, 1963) என்று இதனை உறுதிசெய்கிறார்.

சுமார் 300 கி.மு. - மெகஸ்தனிஸ் இந்தியாவுக்கு வருகை தந்தபோது, பண்டையா என்னும் அரசி பாண்டி நாட்டை ஆண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவரது நாட்குறிப்பில் பாண்டிய நாடு பற்றிய தகவல்கள் பல உள்ளன. "எரெக்ளீசு (Eraklies) என்ற மன்னனுக்கு 'பண்டேயா' என்ற பெண் பிறந்தாள். அவளுக்குக் கடல்சார்ந்த தென்னாட்டைக் கொடுத்தான். அதில் 350 ஊர்கள் இருந்தன. நாள்தோறும் அரசிக்கு ஓர் ஊர்மக்கள் திறை செலுத்த வேண்டும் என்று ஆணையிட்டான்" (Nilakanda Sastri K.A., 1967) என்ற செய்தி யவன நாட்டுத் தூதுவனின் குறிப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுப் பதிவாளரான பிளினி தனது பதிவில் பாண்டிய நாட்டைப் பற்றி, "நான் எழுதும் சமயத்தில் இப்பகுதியை ஆள்பவர் கேலபொத்ராஸ் (கேரளபுத்திரர் என்பதன் கிரேக்க மரூஉ) ஆவர். இதனருகே இதைவிட இன்னும் வாய்ப்பான மற்றொரு துறைமுகம் உண்டு. நியாகுந்தி என்ற நாட்டின் பகுதியில் அது அமைந்துள்ளது. அதுவே பராகே என்பது. இந்நாட்டின் அரசன் பெயர் பாண்டியன். அவன் இத்துறைமுகத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்நாட்டில் உள்ள மதுரை என்னும் நகரத்தில் தங்கியுள்ளான்" (Kaṉagasapai, V, 1962) என்று குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது.

## கிரேக்க நாட்டு உறவு

பழங்காலத்து மதுரைக்கும் கிரேக்க நாட்டுக்கும் பலவிதத் தொடர்புகள் நிலவி வந்தன. கிரேக்கப்படைவீரர்கள் பாண்டிய நாட்டில் பணியாற்றினார்கள் என்பதை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. மேலை வாணிகர் யவனர் எனப்பட்டனர். கிரேக்க நாட்டவர் தம் மொழியை 'அய்வானேஸ்' (Ayvanesh) என்றுதான் குறித்தனர். யவன என்ற பெயர் இதன் திரிபே. பழைய

சமஸ்கிருதக் காவியங்களிலும் யவன என்ற சொல் எப்போதும் கிரேக்கரையே குறிக்க வழங்கப்படுகிறது. இதுபோலவே பண்டைத் தமிழ் நூல்களில் யவனர் என்ற பெயர் முற்றிலும் கிரேக்கர், உரோமர்களையே குறிக்க வழங்கப்பட்டது. நக்கீரர் பாண்டிய அரசன் நன்மாறனை,பாடும்போது "வெற்றிவேல் ஏந்திய யவனர்கள் தங்கள் நன்கலன்களில் கொண்டுவந்த குளிர் நறுமதுவை பணிப்பெண் பொற்கலங்களில் ஏந்த அந்த இனிய நறாமாந்திக் களிப்புடன் அமைதியுடனும் உன்நாட்கள் கழிவன ஆகுக (நக்கீரர், புறநானூறு, பா.எ.56)" (Kaṉagasapai, V, 1962) என்று குறிப்பிடுகிறார். இதையே அயல்நாட்டு வரலாற்று ஆசிரியரான பெரிப்ளுசு பதிவுகளிலும் காணமுடிகிறது.

முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழர் யவனர்களோடு சிறந்த வணிகவுறவு வைத்திருந்தனர். செங்கடல் செலவு என்னும் கிரேக்க நூலில் மூவேந்தர் துறைமுகங்களான நறவு, தொண்டி, முசிறி, நீலகண்ட நகரம், கொற்கை, அழகன்குளம், காலப்பட்டினம், புதுச்சேரி, எயிற்பட்டினம் போன்றவை சிறந்த துறைமுகங்களாக விளங்கின என்று பெரிப்ளுசு கூறுகிறார்.

"கி.பி. 250 - சீன நாட்டு வரலாற்றியல் அறிஞர் யூ உவான் பாண்டியர் அரசாங்கத்தை, 'பாண்யுவி' எனக் குறித்தார். பாண்டிய மக்கள் சீனர்களைப் போலவே சிறிய உயரம் படைத்திருந்தனர்" (Yu Huan, 2004) எனக் கூறியுள்ளார்.

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த

அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு" (சிலம்பு)

என கோவலன் மதுரைக் கோட்டைவாயிலைக் கடந்த நிகழ்வைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இதில் குறிப்பிடப்படும் யவனர் என்னும் சொல் கிரேக்கர்கள், அயோனியர்கள், உரோமர்கள் ஆகிய மத்தியத்தரைக்கடல் நாட்டினர் அனைவரையும் பொதுவாகச் சுட்டும் சொல்லாகும். இங்கே குறிக்கப் பெறும் யவனர் என்னும் சொல் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவரையே என்று அறிஞர்கள் சுட்டுவர்.

## உரோம நாட்டு உறவு

தற்காலத்தில் மதுரையைச் சுற்றிலும் மேற்கொள்ளப்படுகிற ஆய்வுகள் புதிய பல உண்மைகளை வெளிக்கொணர்கின்றன. தொல்மதுரைப் பாண்டியர்களுக்கும் உரோம நாட்டிற்கும் நெருங்கிய உறவு நிலவியது. கி.மு.27-இல் ரோமப் பேரரசனாக இருந்த அகஸ்டகஸ் சீசர் என்னும் மன்னனின் அரசவைக்குப் பாண்டிய நாட்டிலிருந்து தூதுவர்கள் சென்றிருக்கின்றனர்.

"உரோம அரசுடன் அரசியல் தொடர்பு கொள்வதில் உள்ள நலன்களை முதல் முதலில் கண்டு உணர்ந்தவன் ஒரு பாண்டிய அரசன் ஆவான். உரோமர் நேச நாட்டினனாகும் எண்ணத்துடன் அவன் அகஸ்டஸ் ஸீசரிடம் இரண்டு தூதுக் குழுக்கள் அனுப்பினான். அவற்றுள் ஒன்று ஜூலியஸ் ஸீசர் மாண்ட பதினெட்டாம் ஆண்டில் கி.மு. 26-இல் அகஸ்டஸ் டெராகோனாவில் தங்கியிருக்கும் சமயம் அவனைச் சென்று கண்டது. மற்றது ஆறு ஆண்டுகளுக்குப் பின் (கி.மு. 20இல்) அவர் சமாஸ் தீவில் இருக்கும்போது அவரைச் சந்தித்தது. உரோமப் படைவீரர்கள் பாண்டிய அரசர் பணியிலும் மற்ற தமிழரசர் பணியிலும் அமர்ந்திருந்தார்கள். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆட்சியில் மதுரை கோட்டை வாயில் காப்பாளராக உரோமப் படைவீரர்கள் அமர்வு பெற்றிருந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது." (Kaṉagasapai, V, 1962) சீசரின் காலத்து உரோம நாட்டு நாணயங்கள் மதுரைப் பகுதிகளில் உள்ள அகழாய்வில் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## எகிப்து பாபிலோனிய உறவு

எகிப்து நாட்டு இளவரசியாகிய கிளியோபாத்ரா தனது மேனியழகிற்காக பாண்டிய நாட்டுக் கொற்கை முத்துகளைக் கரைத்துக் குடித்தாள் என்றும் வரலாறு கூறுகிறது.

பாபிலோனிய அரசனான சாலமன் என்பவனுடைய அரண்மனையில் தமிழகத்தைச் சேர்ந்த உவரி என்ற இடத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட தேக்கும், மயில்தோகையும் பயன்படுத்தப் பெற்றன என்றும், உவரிக்கு அந்த நாட்டில் ஒபிர் என்ற பெயர் வழங்கியிருப்பதும் ஆராய்ச்சியாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கிரேக்கர்கள் கண்ட பாண்டியரும் மதுரையும்

"பாண்டிய அரசர்கள் கிரேக்கர்களால் பாண்ட்யன் என்று வழங்கப்பட்டார்கள் என்பதை முன்பே கூறியுள்ளேன். அவர்கள் மக்களையும் பாண்ட்யன்கள் என்று வழங்கினார்கள். அரசனது பெயராலேயே மக்களும் வழங்கப்பட்டமையால் இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளது சரியானதே. அரசன் பாண்டியன் என்றும் மக்கள் பாண்டியர்கள் என்றும் வழங்கப்பட்டார்கள். மதுரையை மொதௌரா" என்றும் அரசகம் வீரபாண்டியன் நகரம்', 'பஸிலியன் பாண்ட்யன்ஸ்" என்றும் தாலமி குறிப்பிட்டிருக்கிறார். பிளினி மதுரையை மொதுரா என்று குறிப்பிடுகிறார். வடமேற்கு இந்தியாவில் கண்ணன் பிறந்த இடமாகிய மதுராவினின்றும் பிரித்துக் காட்டுவதற்காக மதுரையைத் 'தென் மதுரை என்று வடமொழியில் குறிப்பிடுகிறார்கள். கிரேக்கர்கள் இதை 'மெதேரா என்றும், தாலமி கடவுளரின் மெதௌரா என்றும் நாகரிக ஆங்கிலத்தில் முத்ரா என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்." (Caldwell, 1977)

## பாண்டிய நாட்டில் சமயம்

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழகத்தின் தெற்கே தோன்றித் தமிழுக்கும் சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றினர். நாயன்மார்களுள் அரிகேசரி மாறவர்மன், குலச்சிறை (அரிகேசரியின் அமைச்சர்) மங்கையர்க்கரசி போன்றோர் அரச குடும்பத்தைச் சார்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது. திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகர், ஆழ்வார்களில் மதுரகவியாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்றோர் பாண்டிய நாட்டில் தோன்றியவர்கள். அக்காலத்தில் மதுரை, திருப்புத்தூர், திருப்பரங்குன்றம், திருநெல்வேலி போன்ற இடங்களில் சமய மடங்கள் இருந்தனவென்றும் அறிய முடிகிறது. பாண்டிய நாட்டில் சமணத்துக்கும் முக்கியத்துவம் இருந்தது குறிப்பிடத்தக்கது. கூன்பாண்டியனாக இருந்து சமண சமயத்தைச் சார்ந்திருந்தவனே தனது பிளவை நோயால் திருஞான சம்பந்தரால் நின்றசீர் நெடுமாறனாகச் சைவத்தைத் தழுவினான் என்பது சமய வரலாறு.

## பாண்டிய நாட்டின் இடைக்கால எல்லைகள்

தனிப்பாடல்களின் திரட்டு நூலான பெருந்தொகையில் பாண்டிய நாட்டின் எல்லைகள் பற்றிய பாடல் ஒன்று உள்ளது.

"வெள்ளாறு அதுவடக்கா மேற்குப் பெருவழியாம்

தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் - உள்ளார

ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்

பாண்டிநாட் டெல்லைப் பதி" (பெருந்தொகை)

சங்க காலத்திற்குப் பின்னர் பக்தி இலக்கியக் காலத்தில் பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களையும் புதுக்கோட்டையில் வெள்ளாற்றுக்குத் தெற்கிலும் உள்ள நிலப்பரப்பையும் கொண்டுள்ளது. ஆதலால் பாண்டிய நாட்டிற்குத் தென் வெள்ளாற்றினை வடஎல்லையாகவும், குமரிமுனையைத் தென் எல்லையாகவும் கொள்ளலாம். கிழக்கில் வங்கக்கடலை எல்லையாகவும் திருவிதாங்கூர், கொச்சி முதலான பகுதிகள்

வரையிலும் மேற்கு எல்லையாகவும் இருந்தன. மதுரை மாநகரம் பாண்டிய நாட்டின் தலைநகரமாகவும் கொற்கை துறைமுகப் பட்டினமாகவும் திகழ்ந்தது.

## பிற்கால வரலாறு

கடைச்சங்க காலத்திற்குப் பின்னர் பாண்டிய நாடு களப்பிரர்களின் கையில் சிக்குண்டது. ஏறக்குறைய கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை முந்நூறு ஆண்டுகாலம் பாண்டிய நாட்டின் வரலாறு புதையுண்டது. இது தமிழக வரலாற்றிலேயே இருண்டகாலம் என அழைக்கப்படுகிறது. இக்களப்பிரர் ஆட்சியால் சேரபரம்பரை அழிந்து போனது என்றும் அறிய முடிகிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பாண்டிய குலத்தோன்றலாகிய கடுங்கோன் என்பவன் களப்பிரரை வென்று நாட்டை மீட்டான். இதனை வேள்விக்குடிச் செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தக் காலம் கி.பி. 575 என வரலாற்று ஆசிரியர்கள் கணிக்கின்றனர்.

கடுங்கோன் மீட்டளித்த பாண்டிய நாட்டின் ஆட்சி கி.பி ஆறாம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி பத்தாம் நூற்றாண்டு வரையிலும் ஒரு பகுதியாகவும், பின்னர் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மற்றொரு பகுதியாகவும் விளங்கியது. பாண்டிய மன்னர்களுள் செல்வக்கடுங்கோன், மாறவர்மன் அரிகேசரி, கோச்சடையான், ரணதீரன், வரகுண பாண்டியன், முதலாம் சடையவர்மன், சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் மாறவர்மன் அரிகேசரியாகிய நின்றசீர் நெடுமாறன் (கூன்பாண்டின்) காலத்திலேயே சீனப் பயணியாகிய யுவான் சுவாங் பல்லவ நாட்டிற்கு வந்து தமிழகத்தைப் பற்றிய பதிவுகளைத் தந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியான தமிழ்க் குடியின் ஆதிநகராக விளங்கிய மதுரையைக் குறித்த தொன்மை வரலாறு இலக்கியங்களின் வழி எவ்வாறு பதிவாகியுள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. மூன்று மதுரைகள் குறித்த பதிவுகள் காலந்தோறும் பதிவாகியுள்ள விதங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மதுரையின் பல பெயர்களும் அவற்றுக்கான காரணங்களும் மதுரைப் பெயர்கொண்ட இலக்கியப் படைப்பாளர்களான புலவர்களின் பட்டியலும் மதுரையின் சிறப்பினை மேலும் உயர்த்துவன. செவ்விலக்கியங்களான சங்க இலக்கியங்கள் தொடங்கி, புராண இலக்கியங்கள், அயல்நாட்டார் குறிப்புகளிலும் மதுரை வரலாற்றின் பழமையும் புதுமையும் பொதிந்து கிடக்கின்றன. லெமூரியா, கபாடபுரம், மணவூர், தென்புலம், தென்மதுரை போன்ற பெயர்கள் இலக்கியங்கள்தோறும் மதுரை குறித்த பல பதிவுகளைத் தெரிவிக்கின்றன. அதனுடைய தொடர்ச்சியாகவே வையையாற்றின் வடபகுதியில் இன்று அறியப்படுகிற கீழடியும் திகழ்கிறது என்பது மேலாய்வுக்கு வழிவகுக்கிறது. யவனர்களாகிய கிரேக்க, உரோமானியர்களுடனான தொடர்பு குறித்தும் இவை மேலும் இணைப்பினை ஏற்படுத்துகின்றன.

## References


Aiyamperumāḷ kōṉār, (1964) Saṅkakālap pāṇṭiyar, Vāsaṉ Patippakam, 60, vaṭakku āvaṇi mūla street, Madurai – 1.

Appātturaippiḷḷai, k. (1941) Kumarik kaṇdam allatu kaṭal koṇṭa teṉṉāṭu, Tirunelvēlit teṉṉintiya caiva cittānta nūṟpatippuk kaḻakam Limiṭeṭ, Tirunelvēli,

Aṟumukanāvalar, (1957) Tiruviḷaiyāṭaṟpurāṇam Vasaṉam, Vittiyānupālaṉayantiracālai accukkūṭam, Cheṉṉai.

Caldwell (1977), Tirunelvēli sarittiram, kāvyā, veḷiyīṭu, Cheṉṉai.

Cuntaramūrtti E., (1985) Parimēlaḻakar Tirukkuṟaḷ Uraittiṟaṉ, Aintiṇaip patippam, 282, Bhārati road, Cheṉṉai – 600 003.

Irākavaiyaṅkār, rā, (1952), Tamiḻ varalāṟu, Aṇṇāmalai University, Aṇṇāmalai Nagar.

Irāsamāṇikkaṉār, Mā., (2003) Kāla ārāycci, Alamu Patippakam, 9, Ayayāmutali Street, Rāyappēṭṭai, ceṉṉai 600 014,

Kaṉagasapai, V, (1962) Aayirattеṉṉūṟu āṇṭukaṭku muṟpaṭṭa Tamiḻakam, Tirunelvēlit teṉṉintiya saiva cittānta nūṟpatippuk kaḻakam limiṭeṭ, Tirunelvēli,

Kantasāmi mutaliyār, (1947) Siṟupāṇāṟṟuppaṭai viḷakkam, Oṟṟumai office, Thiyākarāyanakar, Madarās,

Maṇi (1965), Tiruviḷaiyāṭaṟpurāṇam & Dhasāvatāram, Aruṇā Patippakam, 127, Teṟkāvaṇi mūlavīti, Madurai.

Naṭēsa Sāstiri, Kaṉakasundarampiḷḷai (1907), Vālmīki Rāmāyaṇa vasaṉam, Kiṣkintā kāṇṭam, ka.Makātēvaṉ, Cheṉṉai.

Pārthasārati, Nā., (Maṇivaṇṇaṉ) (2002), Kapāṭapuram, Tamiḻ puttakālayam, Māsilāmaṇi Street, T.Nagar, Cheṉṉai – 600 017.

Pimalā piracāt mukōpātyāya, Taṭciṇāmūrtti, (1963) Ayalnāṭṭavar kuṟippukaḷil purātaṉa intiyā, campūrṇa carasvati kirantālayam, nellikkuppam.

Puliyūrk kēcikaṉ (2010) Muttamiḻ Madurai, Maṅkai veḷiyīṭu, Cheṉṉai – 600 018

Soundrapāṇdiyaṉ, S, (1997), Araciṉar kīḻtticaic cuvaṭikaḷ nūlakam, Cheṉṉai – 5;,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License